**<u>குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருவையாறு.</u>**

**<u>CC. No. 185/2015</u>**

2025–ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 13–ம் நாள் புதன்கிழமை அரசு தரப்பு சாட்சி–7(PW–7)**–ன் வாக்குமூலம்** (1969–ம் ஆண்டின் 54–வது விதியின் 9–வது பிரிவின் ஏற்பாட்டின்படி) திருமதி.R.ரஷ்யா **இளநிலை உதவியாளர்** அவர்களால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | முத்துவிநாயகம் | தொழில் | | மருத்துவர் |
| த/பெ. | : | ஆதிமூலம் | ஊர் | | கரந்தை |
| வயது | : | 55 | மாவட்டம் | | தஞ்சாவூர் |

**<u>13.08.2025</u>**

**<u>1வது எதிரி ஆஜர். 2, 3, 4, 6 எதிரிகள் ஆஜர் இல்லை. கு.வி.மு.ச.பிரிவு 317ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டுள்ளது. 5, 7 எதிரிகள் இறப்பு</u>**

**முதல் விசாரணை:**

1) நான் தற்போது தஞ்சை மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் அறுவை சிகிச்சை துறை உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 30.11.2014 ஆம் தேதி மாலை 04.15 மணியளவில் திரு.அருள்முருகன் த/பெ சின்ராஜ் என்ற 45 வயது ஆண், தன்னை அதே நாளில் மதியம் 12.00 மணியளவில் தன் வீட்டிற்கு முன்பு அடையாளம் தெரிந்த இரண்டு ஆண் நபர்கள் அரிவாள் மற்றும் கட்டையால் தாக்கியதாக கூறி சிகிச்சைக்கு சேர்ந்துள்ளார் அப்போது அவருக்கு (1) 2 x1x தோல் ஆழம் உள்ள சிதைந்த காயம் இடது பக்க கையில் இருந்தது, 2) 3x2 செமீ அளவுள்ள சிராய்ப்பு காயம் முன் சொன்ன காயத்தின் மேல் இருந்தது. 3) இடது பக்க காலில் தொடு வலி உணர்வு இருந்தது.

2) உள்நோயளியாக அனுமதிக்கப்பட்டிருந்த அவரை அவருக்கு ஏற்பட்ட காயங்களுக்காக பரிசோதித்தேன். கை, மற்றும் கால் பகுதிக்கு நுண்கதிர் படம் எடுக்கப்பட்டு, எழும்பு முறிவு மருத்துவரிடம் கருத்துரை வழங்கப்பட்டு தேவையான சிசிக்சை வழங்கப்பட்டது. அவர் மருத்துவமனையில் இருந்து சிகிச்சை முடித்து 01.12.2014 அன்று மதியம் 02.00 மணியளவில் விடுவிக்கப்பட்டார். அவருக்கு ஏற்பட்ட காயம் சாதாரண காயம் என சான்று வழங்கினேன். **(அருள்முருகன் என்பவரின் விபத்து பதிவேடு, மெடிக்கோ லீகள் ஓப்பினியன் பார்ம் அ.சா.ஆ.3 மற்றும் 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** ஒரு நபரை அரிவாள் மற்றும் கட்டையால் தாக்கினால், மேற்சொன்ன நபருக்கு இருந்த காயம்போல் ஏற்பட வாய்ப்புள்ளது. போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

காயம்பட்ட நபருக்கு இருந்த 1, 2 காயத்தில் புதிய இரத்த போக்கு இருப்பதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் மருத்துவமனைக்கு சேரும் போது இருந்துள்ளது. பொதுவாக காணம் ஏற்பட்ட உடனேதான் புதிய இரத்தபோக்கு

இருக்கும் என்றும் 2, 3 மணிநேரங்களில் இரத்த போக்கு நின்றுவிடும் என்று சொன்னால் சரிதான். இருசக்கர வாகத்தில் இருந்து கீழே விழும்போது மேற்படி காயங்கள் ஏற்பட வாய்ப்புள்ளது என்றால் சரிதான். போலீசார் விசாரணையில் ஆவணங்கள் கொடுத்தது குறித்து சொல்லவில்லை என்றால், சரிதான் ஆவணங்களை Medical Record பிரிவில் இருந்து பெற்றுக்கொள்வார்கள், தொடு வலி உணர்வு இருப்பதாக சொல்வது கற்பணையாக சொல்ல வாய்ப்புள்ளது என்றால் சரிதான்.

**<u>மறுவிசாரணை – இல்லை.</u>**

திறந்த நீதிமன்றத்தில் எதிரிகள் முன்னிலையில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் சொல்லப்பட்டு உடனுக்குடன் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு சாட்சியால் சரியாக உள்ளது என ஒப்புக்கொள்ளப்பட்டது.

ஒம்./–எஸ்.ஆக்னஸ் ஜெப கிருபா,
நீதித்துறை நடுவர்,
திருவையாறு.